**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 -ம் நாள் திங்கட்கிழமை

**<u>O.S. No. 138/2024</u>**

வாதி தரப்பு சாட்சியாகிய PW. 1ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரவி | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | துரைசாமி | கிராமம் | : | புளிச்சக்காடி |
| | | | தொழில் | : | விவசாயம் |
| | | | வயது | : | 65 |

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி..</u>**

வழக்கு சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் சுய சம்பாத்தியத்தில் பெறப்பட்ட சொத்தாகும். புல எண் 57/6, 57/42 ஆகிய சொத்துகள் எனது தாயார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து புல எண் 56/6, 56/65 ஆகிய சொத்துகளை எனது தகப்பனார் எனக்கும் பிரதிவாதியின் தகப்பனாருக்கும் பாக விடுதலை பத்திரம் எதுவும் எழுதி வைத்தாரா என்றால் இல்லை. வழக்கு சொத்துகளின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எனது பெயரிலும் எனது தாயார் பெயரிலும் உள்ளது. புல எண் 57/42, 56/65 ல் ஆகிய இரண்டு இடங்களிலும் சேர்த்து தொகுப்பு வீடு கட்டியுள்ளேனா என்றால் இல்லை. புல எண் 56/65 ல் தான் தொகுப்பு வீடு கட்டியுள்ளளேன். புல எண் 56/65 ல் வில்லங்க சான்றிதழில் பிரதிவாதியின் தகப்பனார் பெயர்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. பிரதிவாதியும் பிரதிவாதியின் தாயாரும் 2015 முதல் 2020 வரை புல எண் 56/6 ல் உள்ள தொகுப்பு வீட்டில் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். நான் புல எண் 56/6 ல் உள்ள தொகுப்பு வீட்டில் 2015 க்கு முன்பு வரை அறுவடை செய்த நெற்பயிர்களை வைப்பதற்கு பயன்படுத்தி வந்தேன் என்றால் சரிதான். நான் புல எண் 57/7 ல் உள்ள இடத்தினை நில அளவையர் மூலம் அளப்பதற்கு நான்கு முறை முயற்சி செய்தும் நான் அளவீடு செய்ய விடாமல் தடுத்து நிறுத்தினேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார் என்றால் பிரதிவாதி தான் என்மீது புகார் கொடுத்தார். நான் எனது

வழக்குரையில் பத்தி 09 ல் நான் தான் பிரதிவாதி மீது புகார் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க நீதிமன்ற அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.23 10:52:14 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.